RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# செவ்விலக்கியங்களில் பண்பாட்டுப்பதிவுகள்

மு. மஞ்சுளா [அ *]

[அ] தமிழ்த்துறை, எஸ் ஆர் எம் கலை அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர், இந்தியா,

# Cultural Traditions Reflected in Classical Tamil Literature

M. Manjula [a, *]

[a] Department of Tamil, SRM Arts and Science College, Kattankulathur-603203, India

*Corresponding Author: manjulatam@srmasc.ac.in

**ABSTRACT**

The Sangam corpus, comprising the Ettuthokai (Eight Anthologies) and the Pattuppattu (Ten Idylls), is one of the most significant collections of classical Tamil literature, preserving the ethical values, social customs, and cultural traditions of the ancient Tamils. The Ettuthokai includes eight anthologies, of which Natrinai, Kurunthogai, Ainkurunuru, Akananuru, and Kalithogai primarily deal with Akam (the inner world of love and personal life), while Purananuru and Pathitrupathu focus on Puram (public life, heroism, and social values). Paripadal uniquely encompasses both Akam and Puram themes. Collectively, these works preserve numerous records of the moral values, cultural practices, and ways of life followed by the ancient Tamil people. This study aims to examine the cultural records found in the classical Ettuthokai anthologies, with particular emphasis on domestic life, generosity, heroism, warfare, hospitality, and the ethical principles that shaped ancient Tamil society. The research primarily draws upon Natrinai, Kurunthogai, Kalithogai, Akananuru, Pathitrupathu, and Purananuru, together with relevant secondary sources, to analyze the cultural heritage preserved in these classical literary works. Through this analysis, the study highlights the enduring cultural values embedded in Sangam literature and their significance in understanding the social history of the ancient Tamils.

**Keywords:** Cultural Traditions, Tamil society, Eight Anthologies, Classical Tamil Literature

## முன்னுரை

பழந்தமிழர்களின் வாழ்வியல் அறங்களை விவரித்துக் கூறும் பதினெண் மேற்க்கணக்கு நூல்களை சங்க இலக்கியம் என்றும் அழைப்பர். சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் பதினெட்டு நூல்களைக் கொண்டது. எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியும், புறநானூறு, பதிற்றுப்பத்து என்னும் இரண்டு நூல்களும் புறப்பொருள் பற்றியும், பரிபாடல் அகப்பொருள், புறப்பொருள் என இரண்டையும் விவரித்து எடுத்துரைக்கும் இலக்கியமாகும். எட்டுத்தொகை நூல்கள் மனிதர்கள் பின்பற்றத்தக்க எண்ணற்ற வாழ்வியல் பண்பாட்டுப் பதிவுகளைத் தெளிவுற எடுத்துரைக்கின்றன.

## அமெரிக்கக் கலைக்களஞ்சியம் சுட்டும் பண்பாட்டுப் பதிவுகள்

செவ்வியலக்கியங்கள் பண்பாட்டுப் பதிவுகளைச் சுட்டிக்காட்டியிருப்பது போன்று, “தத்துவத்துறையில் பண்பாட்டுப் பதிவுகள் என்பது தகுதியானவை என்னும் பொருளில்

அறியபெறுகிறது. பண்பாட்டுப் பதிவுகள் பற்றியக் கோட்பாடானது ஏற்றுக்கொள்ளக்கூடியவை, தகுதியானவை என்னும் பண்புகளுடன் இணைந்தே சுட்டப்பெறுகிறது. ஏனென்றால் இவை யாவும் சமுதாயத்துக்கு ஏற்றவையாக, சரியானவையாக, உண்மையானவையாக, அழகானவையாக, போற்றத்தக்கவையாக, புனிதமானவையாக" (அமெரிக்கக் கலைக்களஞ்சியம், தொகுதி:27, பக்கம் - 182) என்று உரைக்கின்றது. இக்கருத்துகளிலிருந்து ஒரு குழுவாக அல்லது கூட்டமாக வாழும் மனித சமுதாயம் உடலாலும், உள்ளத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படும் நல்லொழுக்கம் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகள் என அறியமுடிகிறது. இப்பண்பாட்டுப் பதிவுகள் யாவும் சமுதாயத்தில் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு இடம்கொடுக்காமலும், சந்தர்ப்ப சூழலால் துன்பங்கள் ஏற்பட்ட வேளையிலும் அவற்றின் சுவடு தெரியாமல் அழிக்கும் தலைமைப் பண்புகளாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இதனை,

"சீறூர் மன்னர் ஆயினும்; எம்வயின்

பாடறிந்து ஒழுகும் பண்பி னோரே;" (புறநானூறு -197)

என்று புறநானூற்றுப் பாடலடிகள் எடுத்துரைக்கிறது. சமுதாயத்தினர் ஒன்றுபட்டு பின்பற்றி வாழவேண்டிய பண்பாட்டு நடைமுறைகளை ஆய்வறிஞர் பதிவுசெய்துள்ளார். "ஒரு பண்பாட்டைச் சார்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தை முறைகளுக்கும் எவையெல்லாம் அவசியமென்று என்று கருதப்படுகிறதோ அவையெல்லாம் அப்பண்பாட்டின் விழுமியங்களாகும். மக்கள் அனைவரும் சமூகமாக கூடிவாழ முற்படும்போது, எவையெல்லாம் மிகவும் முக்கியமானவை எனக் கருதப்படுகிறதோ அவையெல்லாம் பண்பாட்டு விழுமியங்கள்" என்று (பக்தவச்சலபாரதி, (1990) பண்பாட்டு மானுடவியல், ப. 159) குறிப்பிட்டிருப்பதை அறிய முடிகிறது.

மேற்கண்ட பண்படுத்தப்பட்ட விழுமிய பண்புநெறிகளை அனைவரும் பின்பற்றி நடக்கும்போது சமுதாயத்தில் தீய்மைகளின்றி, தொடர்ந்து நன்மைகள் நிகழ்ந்தவண்ணம் இருக்கும் என்பது புலனாகிறது. இத்தகைய பண்புநெறிகளை எட்டுத்தொகை நூல்களில் ஆராயும்போது, இல்லறவியல், கொடைத்திறம், மறம், போர்நெறி, விருந்தோம்பல், பொதுமை பண்புநெறிகள் என தனித்துவம் மிக்க பண்பாட்டுப் பதிவுகளாக நிறைந்திருப்பதைக் காண முடிகிறது.

## இல்லறவியல்

ஒரு சமுதாயம் சிறந்த சமுதாயமாக இருக்கிறது என்றால் அச்சமுதாயத்தில் உள்ள இல்லறங்கள் யாவும் நல்லறங்களாகச் செயல்படுவதாக அறியமுடிகிறது. இல்லறம் எத்தகைய சிறப்புக்களுடன் திகழவேண்டும் என்பதை உலகிற்கு உணர்த்த திருவள்ளுவர் இல்லறவியல் என்ற ஒரு இயலை இயற்றிவுள்ளார் என்பதும் புலனாகிறது. குடும்ப தலைவனும் தலைவியும் ஒருமித்த கருத்துடன் இயைந்து வாழ்ந்தும், இல்லற நெறிகளைப் பின்பற்றியும் நடக்கும்போது அவ்வில்லறத்தில் என்றும் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். இதனை,

"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு

மருவின் இனியவும் உளவோ" (குறுந்தொகை -322)

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றது. இல்லறம் நல்லறமாக திகழவேண்டுமெனில் அங்கு பொய்த்தல் இல்லாத அன்பு குடிகொண்டிருக்கவேண்டும் என்பதை,

"சீறூரோளே மடந்தை வேறு ஊர்

வேந்துவிடு தொழிலொடு செலினும்

சேந்துவிரல் அறியாது செம்மல் தேரே" (குறுந்தொகை - 242)

என்ற குறுந்தொகை பாடலடிகள் தெளிவுபடுத்துகிறது. இல்லறத்தில் இளம்வயதில் தம்பதியர் மனமொன்றி இல்லற மாண்பைப் பின்பற்றி வாழ்கின்றனர். அத்தகைய மாண்புடன், முதுமையிலும் அதாவது தலைவியின் பொழிவு மிக்க மேனி நிறம் மங்கினாலும், உடலில் சுருக்கங்கள் ஏற்பட்டாலும்,

தலைமுடி கறுமை நீங்கி நரைத்தாலும், தலைவன் தலைவியை விட்டு நீங்காமல் பேணிப் பாதுகாத்து அன்புடன் இல்லறத்தை நடத்திச் செல்ல வேண்டும் என்று தோழி தலைவனுக்கு அறிவுறுத்திச் சென்றுள்ளார் என்பதை,

"பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த

நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்

நீத்த லோம்புமதி புக்கே ழூர" (நற்றிணை - 10)

என்ற நற்றிணைப் பாடலடிகளால் அறியலாம். இக்கூற்றிலிருந்து தலைவியின்பால் அன்புக் கொண்டு, சுயநலத்திற்கு சற்றும் இடம்கொடுக்காமல், பொதுநலம் பேணும் தோழியின் மாசற்ற மாண்பும் புலனாகிறது. ஒரு சமுதாயத்தில், வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் திருமணபந்தத்தில் கைகோர்த்து, இணைபிரியாமல் இல்லற ஒழுக்கத்தைப் பின்பற்றி மகிழ்வுடனும் நிறைவுடனும் வாழும்பொழுது, அச்சமுதாயத்தில், சமூகம் ஏற்கவிரும்பாத தகாத செயல்கள் நடைபெறுவது மிகக்குறைவு என்பதை இலக்கியங்கள் கருத்துகளின் ஊடே எடுத்துரைத்திருப்பதைப் பண்பாட்டுப் பதிவுகளாக அறிய முடிகிறது.

## கொடைத்திறம்

தன்னலம் கருத்தாமல் மழைமேகம் மழைப்பொழிந்து மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழி செய்வதைப்போல, பிரதிபலன் பாராமல் அருளுணர்வுடன் எளியவர்களுக்கு கொடுத்து உதவும்போது, அது சமுதாயத்தில் ஏற்றத்தாழ்விற்கு இடமின்றி, சமச்சீர் சமுதாயத்தை உருவாக்கும் என்பதை,

"காராண்மை போல ஒழுகலும்

ஊராண்மை என்னும் செருக்கு" (திரிகடுகம் - 6)

என்று திரிகடுகம் உரைக்கின்றது. ஏழை எளியவர்களுக்கு கொடுத்து உதவுவதே ஈகை என்பதை,

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து" (திருக்குறள் - 221)

என்று ஈதலறத்தை திருக்குறள் தெளிவுபடுத்துகிறது. ஒருவருக்குச் செல்வம் கிடைத்தால் உண்டாகும் பயன் யாதெனில், அச்செல்வத்தின் மூலம் மற்றொருவரின் வாழ்வை செழிக்கச் செய்வதே ஆகும். இதனை,

"செல்வத்துப் பயனே ஈதல்;" (புறநானூறு - 189)

என்று புறநானூற்றுப் பாடலடி சுட்டுகின்றது. தலைவியிடமிருந்து பெறும் இன்பத்தை விட எளியவர்களுக்கு கொடுத்து உதவுவதால் கிடைக்கும் இன்பம் மிகவும் சிறப்புமிக்கது என்பதை,

"ஒண்நுதல் மகளிர் துனித்த கண்ணினும்

இரவலர் புன்கண் அஞ்சும்" (பதிற்றுப்பத்து - 57)

என்ற பதிற்றுப்பத்துப் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றது. வாழும் காலத்தில் செய்யும் நல்வினைகள் அன்றி, வேறெதுவும் துணை நிற்பதில்லை என்றும் ஈதலறத்தின் இன்றியமையாமையை ஔவையார் மூவேந்தரிடமும் வலியுறுத்தியுள்ளார். இதனை,

"இரவலர்க்கு அருங்கலம் அருகாத வீசி,

வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்,

வாழச் செய்த நல்வினை அல்லது,

ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை;" (புறநானூறு -367)

என்ற புறநானூற்றுப் பாடலடிகளால் அறிந்துரைக்கமுடிகிறது.

## மறம்

பழந்தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரண்டு கண்களாகப் போற்றியுள்ளனர். அகவாழ்வில் தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கைப் போற்றுதலுக்குரியதாகவும், புறவாழ்வில் மறமாண்பு போற்றுதலுக்குரியதாகவும் சுட்டிக்காட்டப்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

மனிதர்கள் மனதிட்பத்துடன் செம்மாந்து நிற்பது வீரத்தினால் மட்டுமே ஆகும். குழந்தை இறந்து பிறந்தாலும், தசை பிண்டமாக பிறந்தாலும் வாளால் பிளந்து புதைப்பதே மறக்குடியின் இயல்பு என்பதைச் சேரமான் கணைகாலிரும்பொறை எடுத்துரைத்திருந்ததிலிருந்து மறவுணர்வின் தன்மையினை அறிந்துகொள்ளமுடிகிறது. இதனை,

“குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,

ஆஅள் அன்று என்று வளின் தப்பார்;” (புறநானூறு -74)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் புலப்படுத்துகின்றது. போர்க்களத்தில் எதிர்த்து நின்ற யானையைக் கொன்று மறவன் தானும் மாய்ந்தான் என்றும் இத்தகைய மகனைப் பெற்றப் பொழுதைவிட இக்கணம் பெருமிதம் கொள்கின்றேன் என்றும் உரைத்த மறக்குடித்தாயின் மறமேம்பாடு புலனாகிறது. இதனை,

“களிறுஎறிந்து பட்டனள் என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே;” (புறநானூறு - 271)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன. மறக்குடித்தாய் ஒருத்தியிடம் உன் மகன் எங்குள்ளான் என வினவியுள்ளனர். அதற்கு அத்தாய் பெருமிதம் தோன்ற வெளிப்படுத்தியுள்ளார். புலித்தங்கிச் சென்ற மலைகுகைப்போல, அவனை ஈன்ற வயிறு இங்கு இருக்கிறது. அவனோ போர்க்களத்தில் இருப்பான்; அங்கு சென்றுப்பார்; என்று மறவனை ஈன்ற மறக்குடிதாய், மறத்தில் சிறந்து விளங்கும் மகனின் புகழைப் பெருமிதத்துடன் உரைத்துள்ளார் என்பதைக் காணமுடிகிறது. இதனை,

“புலி சேர்ந்து போகிய கல்அளை போல,

ஈன்ற வயிறோ இதுவே;

தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே!” (புறநானூறு - 86)

என்ற புறப்பாடலடிகளால் தெளிவாகிறது. மறமாண்பு தன்னம்பிக்கையையும், மனதிட்பத்தையும் அளித்து, சொல்லாலும் செயலாலும் உரிய மதிப்பையும் பெற்றுத்தருகிறது என்று உரைக்க முடிகிறது.

## போர்நெறி

பழந்தமிழர்கள் போர் அறத்தைப் பின்பற்றி வாழ்ந்துள்ளனர். செல்வத்தை மற்றும் புகழைப் பெருக்கும் வழிகளில் ஒன்றாகப் போர் நிகழ்வுகள் இருந்திருக்கிறது. போர் வெற்றியால் புகழும் செல்வமும் கிடைக்கும் நிலையிலும், போரின் பொருட்டுத் தேவையற்ற உயிரிழப்புகள் ஏற்படுவதைப் பெரிதும் தவிர்த்துள்ளனர் என்பதை,

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்” (புறநானூறு - 9)

என்று புறநானூறு உரைக்கின்றது.

## விருந்தோம்பல்

இல்லற மாண்பைக் கடைப்பிடித்து வாழ்வதில் விருந்தோம்பல் முக்கிய இடம்பெறுகிறது. இரவுநேரத்தில் வீட்டின் கதவை அடைப்பதற்கு முன்பாக, இல்லக்கிழத்தியானவள் உணவு உண்ண விரும்புவோர் எவரேனும் உள்ளீர்களா என வீட்டின் வெளியே நின்றுக் கூவி அழைத்தப் பிறகே, கதவை அடைக்கும் நடைமுறையைப் பழந்தமிழர்கள் பின்பற்றி வாழ்ந்தனர் என்பதைக் காணமுடிகிறது. பசுக்களை மேய்க்கும் ஆயர்கள் அவர்கள் உண்ணும் உணவை மூங்கில் குழாயில் நிரைத்துச் செல்வர் என்றும் அவர்கள் செல்லும் வழியில் பசியுடன் வருபவர்களுக்கு உணவளித்துப் பகிர்ந்துண்ணும் இயல்புடன் வாழ்ந்திருந்தனர் என்பதை,

“மழவிடைப் புட்டிய குழாஅய்த் தீம்புளி

செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்

புல்லி நன்னாட்டு உம்பர்” (அகநானூறு - 311)

என்ற அகநானூற்றுப் பாடலடிகளால் புலனாகிறது.

## பொதுமைப் பண்புநெறிகள்

வாழ்வியலில் நிகழும், நமக்கான நன்மையும் தீமையும் நம்மால் வருவதேயன்றி, பிறரால் வருவது கிடையாது என்றும் அதனால் நமக்கான நன்மைக்கும் தீமைக்கும் நாம் மட்டுமே பொறுப்பு என்றும் கணியன் பூங்குன்றனார் அறிவுறுத்திச் சென்றுள்ளார். இதனை,

“தீதும் நன்றும் பிறர்தர வாரா;” (புறநானூறு - 192)

என்று புறநானூறு சுட்டுகின்றது. வாழ்க்கையில் நல்லக் காரியங்களைச் செய்ய புறச்சூழல் இடம்கொடுக்காமல் போனாலும், மற்றவர்களுக்குத் தீமைச் செய்வதையாவது தவிர்த்தல் வேண்டும் என்று நரிவெரூஉத் தலையார் வலியுறுத்திச் சென்றுள்ளார் என்பதை,

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்;” (புறநானூறு - 195)

என்ற புறப்பாடலடியால் அறிந்துரைக்கமுடிகிறது. சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் அன்பும் பண்பும் அறிவும் கொண்டு, மனபக்குவத்துடன் நடந்துகொள்ளும் பண்பாட்டுப் பதிவுகளைக் கலித்தொகையும் தெளிவுபட எடுத்துரைக்கிறது. இதனை,

“பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்” (கலித்தொகை - 133)

என்ற கலித்தொகைப் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன. பழந்தமிழர்களின் நடைமுறை வாழ்கையில் பின்பற்றியப் பண்பாட்டுப் பதிவுகளைச் செவ்விலக்கியங்கள் ஐயத்திற்கு இடமின்றி தெளிவாக எடுத்துரைத்துள்ளதை சான்றுகளின் வழி புலனாகிறது.

## முடிவுரை

மேற்கண்ட கருத்துகளிலிருந்து செவ்விலக்கியங்களின் வழியாக பழந்தமிழர்களின் பண்பாட்டுப் பதிவுகளை அறிந்துகொள்ளமுடிகிறது. பழந்தமிழர்கள் சமுதாயத்தின் ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும், ஏற்றத்தாழ்வினைக் களைவதற்கும் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர் என்று அறிந்துரைக்கமுடிகிறது. அன்பும் அருளும் கொண்டு ஈதலைப் போற்றியும், நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் நலனில் அக்கறைக் கொண்டும், உயிரிழப்பிற்கு இடம்கொடுக்காமலும், பொதுமைப் பண்புநெறிகளைப் பின்பற்றியும், விருந்தினரை உபசரித்தும், இல்லக்கிழத்தியும் கிழவனும் இல்லறமாண்பை கருத்தொத்து பின்பற்றியும், ஒளி விளங்கும் கண்களாக காதலையும் வீரத்தையும் ஒருமித்து போற்றியும், தனித்துவம்

மிக்கவர்களாக வாழ்ந்தும், செவ்விலக்கியங்களின் வழி பண்பாட்டுப் பதிவுகளை நல் உலகிற்குக் கொடையளித்துச் சென்றுள்ளனர் என்பதை இக்கட்டுரைப் புலப்படுத்துகிறது.

## References


சாமிநாத ஐயர், உ.வே. (2011) பதிற்றுப்பத்து மூலமும் பழையஉரையும், உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை

சாமிநாத ஐயர், உ.வே. (2014) புறநானூறு மூலமும் உரையும், உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை

சாமிநாத ஐயர், உ.வே. (2018) குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை

பக்தவச்சலபாரதி, (1990) பண்பாட்டு மானுடவியல், பாரதி மணிவாசகர் பதிப்பகம், சென்னை

புலியூர்க் கேசிகன், (2010) நற்றிணை தெளிவுரை, கங்கை புத்தக நிலையம், சென்னை

வரதராசனார், மு. (2014), திருக்குறள் தெளிவுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (2008), அகநானூறு - நித்திலக்கோவை, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License